## தலைநகர் கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2012

### 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது விசேட (டொலர்) கணக்கிலுருந்தான பற்றுதல்களும் அக்கணக்கிற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவுக் கூற்றுக்களின் (எஸ்ஓஈ) மீது நியாயமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான செலவு ரூபா 171,498,584 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 177,530,885 ஆக இருந்தது. மீளாய்விற்குட்பட்ட காலத்திற்கான செயற்திட்டத்தின் செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| கணனி வன்பொருட்களும் துணைக் கருவிகளும் | 8,180,788 | 679,000 | 8,859,788 |
| அலுவலக உபகரணம் | 351,976 | 700,120 | 1,052,096 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 932,656 | 559,442 | 1,492,098 |
| மோட்டார் வாகனங்கள் | 16,504,000 | - | 16,504,000 |
| அபிவிருத்திச் செலவுகள் | 145,529,164 | 4,093,739 | 149,622,903 |
| மொத்தம் | 171,498,584 | 6,032,301 | 177,530,885 |

செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2012 யூலை 10 ஆந் திகதி ஆரம்பித்திருந்தது. எனினும், 2011 யூலை 15 ஆந் திகதியிலிருந்து 2012 யூலை 09 ஆந் திகதி வரையான காலத்திற்கான ரூபா 30,086,789 தொகையான செயற்திட்டத்தின் ஆரம்பக் கிரயமும் மேந்தலைச் செலவுகளும் திரட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| விடயம் | 2011 யூலை 15 ஆந் திகதியிலிருந்து 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான செலவுகள் | 2012 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2012 யூலை 09 ஆந் திகதி வரையான செலவுகள் | 2012 யூலை 09 31 ஆந் திகதியில் உள்ளவாறான திரண்ட செலவு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கணனி வன் பொருட்களும் துணைக்கருவிகளும் | 679,000 | 2,454,720 | 3,133,720 |

| | | | |
|---|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 700,120 | 133,388 | 833,508 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 559,442 | 718,861 | 1,278,303 |
| மோட்டார் வாகனங்கள் | - | 12,276,000 | 12,276,000 |
| அபிவிருத்திச் செலவுகள் | 4,093,739 | 8,471,519 | 12,565,258 |
| மொத்தம் | 6,032,301 | 24,054,488 | 30,086,789 |

## 2.2 விசேட டொலர் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே சுருக்கித் தரப்படுகின்றன.

| | 2012 | |
|---|---|---|
| | யூஎஸ் டொலர் | ரூபா |
| ஆரம்ப வைப்பு | 2,000,000 | 263,884,800 |
| | 2,000,000 | 263,884,800 |
| கழி :- பற்றுதல்கள் | (1,996,961) | (257,491,816) |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | (6,006,577) |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 3,039 | 386,407 |

## 3. அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 9,743,924 தொகையான சம்பளங்களும் மேந்தலைச் செலவுகளும் நிதிக்கூற்றுக்களில் அட்டுறுச் செலவுகளாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆயத்தப்படுத்தல் முற்பணங்களுடன் சேர்த்து ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்திய ரூபா 14,673,676 தொகையான பெறுமதி சேர் வரி (விஏரீ) செயற்திட்டத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான செலவுகளாக கணக்குவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு வொக்சால் வீதியின் இரு பக்கங்களிலும் பாதசாரிகளுக்காக 2.605 கிலோ மீற்றர் நீளமான நடைபாதையினை நிர்மாணித்தலானது 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி ரூபா 239,268,702 ஒப்பந்த தொகையில் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. கார்களையும் மோட்டார் சைக்கிள்களையும் நிறுத்திவைப்பதன் காரணமாக நடைபாதையின் குறித்த சில இடங்களில் தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன.

II. நடைபாதைகளின் மீது வாகனங்களை ஓட்டுவதனாலும் நிறுத்திவைப்பதனாலும் நடைபாதைகளில் பொருத்தப்பட்ட நடைபாதைக் கற்கள் பாதிப்படைந்து அல்லது அமிழ்ந்து காணப்பட்டன.

III. பொருத்தமற்ற நிர்மாணத்தின் காரணமாக மழைநீர் வடிந்தோடும் வடிகால்கள் முறையாகச் செயற்படவில்லை.

(ஆ) கொழும்பு நகரப் பகுதியில் ஆண்கள். பெண்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கான ஏழு மலசலகூடத் தொகுதிகளின் நிர்மாணம் 2012 ஆகஸ்ட் 23 ஆந் திகதி ரூபா 50,453,800 ஒப்பந்த தொகையில் ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. இம்மலசலகூடத் தொகுதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**வொக்சோல் வீதி**

(i) துப்பரவுசெய்தல் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக தனியான களஞ்சிய வசதிகள் காணப்படவில்லை. எனினும் அனைத்து பொருட்களும் உபகரணங்களும் ஒரு மலசலகூடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) ஆண்கள் மலசல கூடத்திலுள்ள சிறுநீர் துப்பரவாக்கும் அலகு செயற்படவில்லை.

**வெள்ளவத்தை**

(i) மலசலகூடங்களுக்கு வெளியே பொருத்தப்பட்டிருந்த மின்சார விளக்குகள் செயற்படவில்லை.

(ii) முகம் கழுவும் கோப்பையிலிருந்து வழிந்தோடும் நீர் மலசலகூடத்தில் பாய்ச்சப்படுகின்றது.

**பம்பலப்பிட்டி**

சுவரில் பொருத்தப்பட்ட விளக்குகள் துருப்பிடித்திருந்தன.

## 4. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதி மீளாய்வு

நிதியளித்தல், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு நிதி ஏற்பாடு, 2012 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறித்த சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | கடன் உடன்படிக்கையின் படி நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதி | 2012 திசெம்பர் 31 வரையும் பயன்படுத்தப்பட்ட நிதி |
|---|---|---|---|---|---|
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐபீஆர்டீ | 213 | 27,890.22 | 130.94 | 327.06 | 327.06 |
| ஜிஓஎஸ்எல் | 108 | 14,141.52 | 100.00 | 58.88 | 64.91 |
| மொத்தம் | 321 | 42,031.74 | 230.94 | 385.94 | 391.97 |

## 4.2 பௌதீகச் செயலாற்றல்

செயற்திட்டம் 2012 யூலை 10 ஆந் திகதியிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தின் போது ஏழு ஒப்பந்தங்களை வழங்கியிருந்ததுடன் இவ்வொப்பந்தங்களின் செயலாற்றலின் விபரம் கீழே காட்டப்படுகின்றன.

| உப கூறு | தொகுதி இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பெறுமதி சேர் வரி இல்லாது ஒப்பந்த பெறுமதி | ஒப்பந்த காலம் (மாதங்கள்) | ஆரம்பித்தல் திகதி | பூர்த்திசெய்த வேலைகளின் பெறுமதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீகச் செயலாற்றல் | | முரண் சாதகமானது/ (பாதகமானது) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் | | | ரூபா மில்லியன் | திட்டமிட்ட செயலாற்றல் | உள்ளபடியான செயலாற்றல் | |
| 1.1 | எஸ்எல்எல் ஆர்டீசீ/ டபிள்யூ/02 | அலுத்மாவத்தை மதகு, முத்துவெல்ல பெட்டி வடிகால், முத்துவாரம் குகை பிரதான வழி, முகத்துவாரம் கடலுக்குள் நீரைப் பாய்ச்சும் கால்வாயின் கரையை மேம்படுத்துதல் மற்றும் பிரதான நீர் வழிந்தோடியின் கரையை பாதுகாத்தல் | 409.97 | 18 | 12/11/27 | - | 7 | 5 | (2) |
| 2.1 | சீஎம்சீ/டபிள்யூ/01 | பொது வசதிகளை மேம்படுத்தல் - தொகுதி 01 | 50.95 | 06 | 12/09/14 | 4.0 | 61 | 24 | (37) |
| 2.1 | சீஎம்சீ/டபிள்யூ/02 | நடைபாதையை மேம்படுத்தலும் அஸ்பல்ட் பதித்தலும் - தொகுதி 01 | 239.26 | 07 | 12/09/25 | 5.69 | 20.2 | 15.8 | (4.4) |
| 2.1 | சீஎம்சீ/டபிள்யூ/04 | நடைபாதை மேம்படுத்தலும் அஸ்பல்ட் பதித்தலும் தொகுதி 02 | 260.49 | 09 | 12/09/27 | 24.85 | 10 | 11 | 1 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2.1 | சீஎம்சீ/டபிள்யூ/06 | நகரமண்டப சுற்றுவட்டத்தில் மாதிரி வலயத்தை அபிவிருத்தி செய்தல் தொகுதி – 02 | 308.88 | 11 | 12/10/01 | 12 | 18 | 7 | (11) |
| 2.1 | சீஎம்சீ/டபிள்யூ/08 | நடைபாதை மேம்படுத்தலும் அஸ்பல்ட் பதித்தலும் - தொகுதி – 03 | 283.51 | 09 | 12/09/29 | 15.4 | 24.5 | 19 | (5.5) |
| 2.1 | சீஎம்சீ/டபிள்யூ/09 | நகரமண்டப சுற்றுவட்டத்தில் மாதிரி வலயத்தை அபிவிருத்தி செய்தல் - தொகுதி – 01 | 77.24 | 11 | 12/09/14 | 7.677 | 38 | 21 | (17) |